# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர் மன்றத்தின் 17–05–2018–ம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற அவசரக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் திடக்கழிவுகளை முறையாக பிரித்து மறுசுழற்சி பயன்பாட்டிற்கு கொண்டுவர, மார்த்தாண்டம் சந்தை அருகில் Micro Compost centre அமைக்க ரூ.49 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை திட்ட நிதி ஒதுக்கீடு பெற்று செயல்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3099**
**திட்ட நிதி ஒதுக்கீடு பெற்று பணி செய்ய மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

பொருள் எண். 2

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வி.எல்.சி. கலையரங்கத்தினை 1–4–2018 முதல் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதால் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.3,00,150/–க்கு மன்றம் தனது தீர்மானம் எண்.3070, நாள் 28–03–2018–ல் ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள குத்தகைதாரர் திரு.எம். கிறிஸ்துராஜ் என்பவருக்கு 1–4–2018 முதல் வி.எல்.சி.கலையரங்கத்தினை குத்தகைக்கு விடப்பட்டு உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால் கட்டணம் வசூல் செய்யும் அட்டவணையினை குறிப்பிடவில்லை. ஏற்கனவே துறைமூலம் வசூல் செய்யப்பட்ட போது கல்யாணநிகழ்ச்சிக்கு கலையரங்கத்திற்கு ஒரு நாள் வாடகை ரூ.10,000/–மும் வரவேற்புநிகழ்ச்சிகளுக்கு ஒரு நாள் வாடகை ரூ.7,500/–ம் வசூல் செய்யப்பட்டு வந்தது. தற்போது குத்தகைக்கு விடப்பட்டுள்ளதால் தொகையினை நிர்ணயம் செய்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு:– வாடகை தொகையினை நிர்ணயம் செய்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3100**

**வி.எல்.சி. கலையரங்கத்திற்கு திருமண நிகழ்ச்சிக்கு ரூ.13,000/– மற்றும் இதர நிகழ்ச்சிகளுக்கு ரூ.10,000/– வீதம் வசூல் செய்திடவும், மேலும் வி.எல்.சி.மைதானம் நகராட்சி பராமரிப்பு செய்து நிகழ்ச்சிகளுக்கு நகராட்சி வசூல் செய்திடவும் குத்தகைதாரருக்கு உரிய அறிவிப்பு வழங்க நடைமுறைப்படுத்த மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண். 3</u>

93–வது வாவுபலி பொருட்காட்சியின் 10–05–2018–ம் தேதிய நடைபெற்ற ஏல/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு கேட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

| வ. எண் | இனம் | 2015–16ம் ஆண்டில் முடிவு செய்யப்பட்ட உச்ச தொகை ரூபாய் | 2016–17ம் ஆண்டில் முடிவு செய்யப்பட்ட உச்ச தொகை ரூபாய் | 2017–18ம் ஆண்டில் முடிவு செய்யப்பட்ட உச்ச தொகை ரூபாய் | தற்போதைய ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி | | | இந்த ஆண்டின் அதிக தொகை ரூபாய் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பெயர் | ஏலத் தொகை ரூபாய் | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூபாய் | |
| 1 | அப்பளம் பஜ்ஜி கடை அமைத்து நடத்தும் உரிமம் | 180000 | 151100 | 213500 | எ. நித்தியா<br>கிளிட்டோ | –<br>– | 1,80,000<br>2,15,000 | |
| 2 | பாப்கான் விற்பனை செய்யும் உரிமம் | 117000 | 88600 | 101300 | எ. ஆரோக்கிய ஜோஸ்<br>கிளிட்டோ | –<br>– | 1,02,500<br>70,500 | |
| 3 | பானி பூரி அமைத்து நடத்தும் உரிமம் | 70500 | 77500 | 74501 | எ. நித்தியா<br>எ. ஆரோக்கிய ஜோஸ் | –<br>– | 70,500<br>76,500 | |
| 4 | தபால் நிலையம் முன்னால் உள்ள கடை எண். 1 | 26000 | | 26800 | எஸ். சாதம் உசேன்<br>எம். ஷாஜகான் | –<br>– | 26,000<br>27,000 | |
| 5 | வேலுத்தம்பி திடல் பக்கம் உள்ள கடை எண். 1 | 15100 | 15250 | 15600 | பேபி<br>கிருஷ்ணதாஸ் | –<br>– | 15,600<br>15,700 | |
| 6 | வேலுத்தம்பி திடல் பக்கம் உள்ள கடை எண். 2 | 15200 | 15250 | 15400 | பேபி<br>கிருஷ்ணதாஸ் | –<br>– | 15,550<br>15,400 | |

அ.கு.:– வரிசை எண்.1 முதல் 6 வரையுள்ள இனங்களுக்கு இருநபர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்கள். அதில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தொகைகள் கடந்த வருட

குத்தகை தொகையினை விட அதிகமாக இருப்பதால் மேற்கண்ட குத்தகை இனங்களுக்கு உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3101**

**உயர்ந்த ஒப்பந்தப்புள்ளிகளுக்கு உரிமம் வழங்கலாம். மீதமுள்ள இனஙகளுக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.**

<u>பொருள் எண் .4</u>

நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண்.2571/2017/J1, நாள் 23–04–2018 பொது சுகாதார நடவடிக்கை தொடர்பாக அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அறிவுரையில் டெங்கு மற்றும் தொற்றுவியாதிகள் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக டெங்கு பணிக்கு எடுத்த பணியாளர்கள் நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு குறைந்த பட்சம் 50 வீடுகள் என்ற அடிப்படையில் 6 நாட்களுக்கு 300 வீடுகளில் கொசு ஒழிப்பு பணிகள் செயல்படுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி குழித்துறை நகராட்சி பகுதியில் டெங்கு நோய்பராமல் தடுக்கும்பொருட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ2/194/2016, நாள் 11–02–2018–ன்படி ஏற்கனவே டெங்கு பணிகளுக்கு வழங்கப்பட்ட தினக்கூலி தொகை ரூ.430–லிருந்து நாள் ஒன்றுக்கு ரூ.180 குறைவு செய்து ரூ.250 வீதம் வழங்க அனுமதியும் பணிநேரத்தை காலை 8 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை பணியமர்த்தவும் மேற்படி செலவினத்தை பொதுநிதியிலிருந்து செலவிடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தின்படி மேற்குறிப்பிட்ட பணிகள் செயல்படுத்திடவும் பணிகளை மேற்கொள்ளவும் ஏற்கனவே குழித்துறை நகராட்சியில் டெங்கு பணிக்கு பணியமர்த்தப்பட்ட பணியாளர்களை பணியமர்த்திடவும் மன்ற அனுமதிக்கு.
அ.கு.:– மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3101 (A)**
**அனுமதிக்கப்பட்டது.**

**குழித்துறை நகர் மன்றத்தின் 30–05–2018–ம் புதன்கிழமை நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சிப் பகுதியில் 5483 வீடுகள் அமைந்துள்ளன. சொத்துவரி விதிப்பு கட்டிடங்கள் மொத்தம் 10607–ல் குடியிருப்பு கட்டிடங்களுக்கான வரிவிதிப்புகள் 9341 மற்றும் வணிக கட்டிடங்களுக்குரிய வரிவிதிப்பு 1266 ஆகும். இந்நகராட்சியிலிருந்து நாளது தேதி வரை 4357 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. குடிநீர் இணைப்புகள் வழங்கப்படாத வரிவிதிப்புதாரர்களுக்கு எதிர்வருங்காலங்களில் குடிநீர் இணைப்பு வழங்கும் பொருட்டு குடிநீர் குழாய்கள் அமைத்திட (Internal Plumping) மதிப்பீடு ரூ.1,67,00,000/–ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை திட்ட நிதி ஒதுக்கீடு பெற்று செயல்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு:– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3102**
**திட்ட நிதி ஒதுக்கீடு பெற்று பணி செய்ய மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

பொருள் எண் .2

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட கீழ்பம்மம் பகுதியில் அமைந்துள்ள உரக்கிடங்கில் சேகரமாகும் குப்பைகளை Bio-Mining Process செய்வதற்கு ரூ.1,20,00,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை திட்ட நிதி ஒதுக்கீடு பெற்று செயல்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு:– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3103**
**திட்ட நிதி ஒதுக்கீடு பெற்று பணி செய்ய மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

பொருள் எண் .3

நகராட்சி அலுவலகத்தில் பயன்பாட்டில் உள்ள குழித்துறை நகர புல எண்கள் அடங்கிய வரைபடம் மிகவும் கிழிந்து, அளவுகள் தெளிவில்லாமலும், பராமரிக்க இயலாமலும் உள்ளதால், நகராட்சிக்கு தேவையான புதிய வரைபடங்கள் பெற்றுதர உதவி இயக்குநர், நில அளவைத் துறைக்கு கடிதம் எழுதப்பட்டது. அதற்கு உரிய தொகை செலுத்துமாறு, இணை இயக்குநர், மத்திய நில அளவை அலுவலகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.டி1/9474/2017, நாள் 1–2–2018–ன்படி ரூ.13200/–க்கான காசோலை அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி புதிய வரைபடங்கள் (A block, 17 sheet, B block 21 sheet, C block 28 sheet ) பெற ரூ.13200/– நில அளவைத்துறைக்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.388/2017/ந.அ.ஆ.

**நகர்மன்றத் தீர்மான எண். 3104**
**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் .4

நகராட்சிப்பகுதிக்குள் கட்டிடங்கள் கட்ட, கட்டிட உரிமையாணை கட்டணங்கள் நிர்ணயம் செய்து மன்றம் தீர்மானம் நிறைவேற்றியது. தீர்மான எண்.2894, நாள் 26–05–2017 தீர்மான விபரத்தை பொது மக்கள் அறியும் வண்ணம், மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய வேண்டி அரசு கணக்கில் ரூ.10,500/–க்கான கருவூல செலான் எடுக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு. :– ரூ.6300/–க்கான கருவூல செலான் அரசு கணக்கில் எடுக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3105**
**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் .5

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN75L.0828 ஆயில் சர்வீஸ் செய்யப்பட்டு 15000 கி.மி. தூரம் ஒடியுள்ளதால் மேற்படி வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ் செய்து பழுதுகள் நீக்கம் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.36815/–ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தின் பழுதுகள் நீக்கம் செய்யவும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3106**
**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் .6

பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–2018–ன்கீழ் குழித்துறை நகராட்சிக்குட்பட்ட கீழ்பம்மம் முதல் சிறிய காட்டுவிளை செல்லும் வழிப்பாதையில் ரூ.3.00 லட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் அமைப்பதற்கு இடஆய்வு சான்று மற்றும் மதிப்பீடு அனுப்பி வைக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.எண்.ஆ3/4230/2017, நாள் 19–2–2018–ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி இடம் தான பத்திர எண்.275/2018–ன்படி கவர்னர் பெயருக்கு பத்திரம் பதிவு செய்யப்பட்டு நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தினை நகராட்சி பாதையாக ஏற்கவும், அவ்விடத்தில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் சாலை அமைக்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

அ.கு. :– மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3107**
**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் .7

2018–2019–ம் வருடத்திற்கு குழித்துறை நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்கள் பல்வேறு காரணங்களுக்காக உள்ளூர் மற்றும் வெளியூர் செல்வதால் அவர்களுக்கு பயணப்படி செலவு உத்தேசமாக ரூ.1,25,000/– வரும் என்பதால் 2018–2019–ம் வருட பயணப்படி செலவுத் தொகையாக ரூ.2,00,000/–க்கு உரிய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு. :– மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண். 8</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிப்பு திருத்தம் தொடர்பாக அறிவிப்பு வழங்குதல் பொருட்டு பத்திரிகை விளம்பரம் செய்த வகைக்கு வரப்பெற்ற செலவினத்தொகை ரூ.25,200/– ஆகும். செலவுத் தொகை மன்றத்தின் பார்வைக்கும் செலவின தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு. :– செலவுத் தொகை ரூ.25,200/– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3109**
**<u>அனுமதிக்கப்பட்டது</u>**

<u>பொருள் எண் .9</u>

குழித்துறை நகராட்சி அலுவலகத்திலுள்ள அனைத்து பிரிவிற்கும் தேவைப்படும் எழுது பொருட்கள், படிவங்கள், கணக்கர் பிரிவிற்கு தேவைப்படும் பதிவேடுகள் வரிவசூல் பிரிவிற்கு தேவைப்படும் இரசீதுகள், கணினி பிரிவிற்கு தேவைப்படும் டோனர்கள், சுகாதார பிரிவிற்கு தேவைப்படும் பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள், படிவங்கள், பொறியியல் பிரிவிற்கு தேவைப்படும் M. Book, பதிவேடுகள் போன்றவற்றை அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு அச்சகத்திலிருந்து வாங்கிட உத்தேச செலவினமாக ரூ.9,00,000/– அதை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிடவும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3110**
**<u>அனுமதிக்கப்பட்டது</u>**

<u>பொருள் எண் .10</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்ள 4–5–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.7–ல் உண்டனாகுழி பெருங்குளம் சாலை தார் தளம் | 2.00 | 1) வி. பாலகிருஷ்ணன்<br>2) கே. நேசையன் | 0.67% குறைவு<br>13.67% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமைத்தல் | | | |
| 2 | வார்டு எண்.6 இடக்குளம் சானல் கரை ரோடு தார் தளம் அமைத்தல் | 4.80 | 1) வி. பாலகிருஷ்ணன்<br>2) சி. சுரேஷ் | 0.67% குறைவு<br>7.95% அதிகம் |

அ.கு.:– அ) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 மற்றும் 2–ற்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.வி. பாலகிருஷ்ணன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3111**
**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் .11

திருநெல்வேலி மண்டல நகராட்சிகளின் தெரு விளக்கு பணிகளுக்காக விரிவான திட்ட மதிப்பீடு (DPR ) தயார் செய்த வகைக்கு குழித்துறை நகராட்சிப் பங்குத் தொகையாக ரூ.2,82,826/– நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி என்ற முகவரிக்கு வங்கி வரைவோலையாகவோ அல்லது காசோலையாகவோ அனுப்பி வைக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ந.க.எண்.1406/2017/பி1, நாள் 4–5–2018–ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. :–அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3112**
**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் .12

93–வது வாவுபலி பொருட்காட்சியின் 30–05–2018–ம் தேதிய நடைபெற்ற மறுஏலம் மற்றும் மறுஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு கேட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | இனம் | 2015–16ம் ஆண்டில் முடிவு செய்யப்பட்ட உச்ச தொகை ரூபாய் | 2016–17ம் ஆண்டில் முடிவு செய்யப்பட்ட உச்ச தொகை ரூபாய் | 2017–18ம் ஆண்டில் முடிவு செய்யப்பட்ட உச்ச தொகை ரூபாய் | தற்போதைய ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி | | | இந்த ஆண்டின் அதிக தொகை ரூபாய் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பெயர் | ஏலத் தொகை ரூபாய் | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூபாய் | |
| 1 | தபால் நிலையம் | 23400 | 24909 | 25500 | எம். ஹரிகுமார் | – | 26,000 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | முன்னால் உள்ள கடை எண். 4 | | | | சேம்ராஜ் | – | 25,800 | |
| 2 | தபால் நிலையம் முன்னால் உள்ள கடை எண். 5 | 27899 | 30401 | 28500 | மரியஜாண்ராஜ்<br>ஆர். காந்தி | –<br>– | 29,500<br>29,000 | |
| 3 | தபால் நிலையம் முன்னால் உள்ள கடை எண். 6 | 28799 | 30001 | 28500 | மரியஜாண்ராஜ்<br>ஆர். காந்தி | –<br>– | 28,800<br>29,000 | |
| 4 | தபால் நிலையம் முன்னால் உள்ள கடை எண். 7 | 26200 | 28001 | 28500 | என். சுஜிந்த்<br>சேம்ராஜ் | –<br>– | 28,500<br>29,000 | |
| 5 | தபால் நிலையம் முன்னால் உள்ள கடை எண். 8 | 25300 | 29001 | 27300 | என். சுஜிந்த்<br>எம். ஹரிகுமார் | –<br>– | 28,000<br>27,500 | |
| 6 | பொருட்காட்சி திடல் கடை எண். 6 | 28000 | 29500 | 32600 | C.J. நவாஸ்<br>P.J. மும்தாஸ் | –<br>– | 33,200<br>32,900 | |

அ.கு.:– வரிசை எண்.1 முதல் 6 வரையுள்ள இனங்களுக்கு இருநபர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்கள். அதில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தொகைகள் கடந்த வருட குத்தகை தொகையினை விட அதிகமாக இருப்பதால் மேற்கண்ட குத்தகை இனங்களுக்கு உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3113**

**உயர்ந்த ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் அனுமதிக்கப்படுகிறது. மீதமுள்ள இனங்களுக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.**

<u>பொருள் எண் .13</u>

அரசாணை எண்.34, நாள் 22–08–2000–ல் வாவுபலி நிகழ்ச்சிக்கு ரூ.5.00 லட்சம் வீதம் வருடத்திற்கு 10% கூடுதல் செலவினம் செய்ய நிர்ணயம் செய்யப்பட்டதின்படி கீழ்கண்ட வேலைகளுக்கு கீழ்கண்டவாறு உள்ள தொகையின் அடிப்படையில் செலவு செய்ய மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

I)
1. 10’ x 8’ = பொருட்காட்சி திடலிலுள்ள 1 முதல் 30 வரை
2. 7’ x 5’ = தபால் நிலை முன்பக்க கடைகள் 1 முதல் 11 வரை
3. 8’ x 6’ = வேலுத்தம்பி திடலிலுள்ள கடைகள் 1 முதல் 20 வரை
4. 7’ x 6’ = பொதுப்பணி துறை பக்கம் உள்ள கடை 1 முதல் 11 வரை
5. 9’ x 8’ = 1 எண் (விளம்பர ஸ்டால்)
6. 9’ x 6’ = 5 எண்கள் ( அரசு ஸ்டால் )
7. 26’ x 20’ = 1 எண் ( தீயணைப்பு துறை )
8. 20’ x 12’ = 1 எண் (ஐஸ்கிரீம் ஸ்டால் மற்றும் கூல் டிரிங்ஸ்)
9. 40’ x 10’ =1 எண் (காவலர் பாதுகாப்பு மற்றும் அவசரசிச்சைபிரிவு)
10. 50’ x 20’ = 1 எண் (மெடிக்கல் கண்காட்சி )
11. 40’x 36’ = 1 எண் (காய்கறி ஸ்டால் )
12. 30’x 20’ = 1 எண் ( கைவினை பொருட்கள் ஸ்டால்)

மேற்கண்ட ஸ்டால்களில் சுற்றி அடைப்பு பணிகள் நகராட்சியால் குறிப்பிடும் இடஙகளில் சென்டரிங அடித்தல் மேலும் பக்ககாட்சி மைதானத்தை 15 அடி உயரத்தில் டின் சீட்டினால் சுற்றிடைக்கும் வேலை செய்ய மதிப்பீடு ரூ.3.25 லட்சம்.

II) நுழைவாயில் அலஙகாரம் மற்றும் நான்கு இடஙகளில் ஆர்ச் அமைக்கும் வேலை மதிப்பீடு ரூ.50,000/–

III) கடல் மணல் இறக்கும் வேலை மதிப்பீடு ரூ.60,000/–

IV) பரிசு பொருட்கள் விநியோகம் செய்தல் ரூ.2.50 லட்சம்

V) வாகனம் மூலம் விளம்பரம் செய்தல் மற்றும் சுவரொட்டி மற்றும் பேனர்கள் கட்டுதல் வேலை மதிப்பீடு ரூ.50,000/–

VI) ஒலி ஒளி அமைக்கும் வேலை மற்றும் தடையில்லா மின்சாரம் வழஙக ஜெனரேட்டர் அமைக்கும் வேலை மதிப்பீடு ரூ.95,000/–

VII) பேனர் மற்றும் தட்டி போர்டு அமைக்கும் வேலை (Flex) மதிப்பீடு ரூ.13,000/–

VIII) நாளிதழில் விளம்பரம் ரூ.2.50 லட்சம்

IX) நிழற்படம் எடுத்தல் ரூ.15,000/–

X) மின்சார வாரியத்திற்கு மின்கட்டணம் செலுத்துதல் ரூ.7.00 லட்சம்

XI) நகராட்சி பணியாளர்களுக்கு தினப்படி வழஙகுதல் ரூ.8.00 லட்சம்

XII) முன்னாள் ராணுவத்திற்கு ஊதியம் வழஙகுதல் ரூ.1,00,000/–

XIII) ரகசிய காமிரா அமைக்கும் வேலை ரூ.65,000/–

XIV) தீயணைப்பு துறைக்கு கட்டணம் செலுத்துதல் ரூ.75,000/–

XV) வரவேற்பு நிகழ்ச்சிக்கு தாலப்பொலி, செண்டமேளம் செய்யும் வேலை மதிப்பீடு ரூ.30,000/–

XVI) உணவு ஏற்பாடு செய்தல் ரூ.75,000/–

XVII) அரசு பிறஸ் மூலம் அச்சடிக்கும் வேலை ரூ.1,30,000/–

XVIII) எதிர்பாரத செலவினத்திற்கு ரூ.5,00,000/–

------------

மொத்த தொகை ரூ.32,80,000/–

------------

அ.கு.:- மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3114**

**வரிசை எண்.1, 3, 5, 6, 7, 9, 13 ஆகிய இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி மூலமும் மீதமுள்ள இனங்கள் (வரிசை எண்.2, 4, 8, 10, 11, 12, 14, 15, 16, 17 மற்றும் 18 ஆகிய இனங்களை துறைமூலம் பணிகள் செய்திட மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண் .14</u>

குழித்துறை நகராட்சியில் கீழ்காணும் திட்டப்பணி மேற்கொள்ள 16–05–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான சர்.சி.பி. இராமசுவாமி ஐயர் நினைவு பூங்காவில் மின்பணி மற்றும் கூடுதல் பணிகள் செய்தல் | 9.90 | 1) எஸ். பாபு<br>2) வி. பாலகிருஷ்ணன் | 0.14% குறைவு<br>1.10% அதிகம் |

அ.கு.:– வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் திரு.எஸ். பாபு என்பவரால் கொடுக்கப்பட்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3115**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண் .15</u>

குழித்துறை நகராட்சியில் கீழ்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்ள 18–05–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1 வள்ளிக்கோட்டு குளம் முதல் படப்பறை குளம் சாலையின் ஒருபகுதி சிமெண்டு | 9.90 | 1) பி. பிறேம்குமார்<br>2) கே. கோபுகுமார் | 0.01% குறைவு<br>0.75% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | தளம் அமைத்தல் | | | |
| 2 | வார்டு எண்.10 பழவார் சி.எஸ்.ஐ.சர்ச் சாலை பேவர் பிளாக் அமைத்தல் | 4.80 | 1) கே. தாஸ்<br>2) கே. கோபுகுமார் | 0.08% குறைவு<br>0.3% அதிகம் |

அ.கு.:– வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ற்கு திரு.பி. பிறேம்குமார், வரிசை எண்.2–ற்கு திரு.கே. தாஸ் ஆகியோர் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3116**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண் .16</u>

குழித்துறை நகராட்சியில் கீழ்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்ள 24–05–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1 படப்பறை முதல் வள்ளிக்கோடு செல்லும் சாலையில் வடிகால் ஒடை அமைத்து சிறுபாலம் அமைத்தல் | 9.80 | 1) பி. பிறேம்குமார்<br>2) கே. கோபுகுமார் | 0.05% குறைவு<br>5.80% அதிகம் |
| 2 | வார்டு எண்.17 அட்டைக்குளம் சாலையில் மழைநீர் வடிகால் அமைத்து சிலாப் அமைத்தல் | 7.50 | 1) கே. தேவராஜ்<br>2) பி. பிறேம்குமார் | 0.04% குறைவு<br>1.60% அதிகம் |

அ.கு.:– வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் திரு.பி. பிறேம்குமார், வரிசை எண்.2–ற்கு திரு.கே. தேவராஜ் ஆகியோர் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3117**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 17</u>

குழித்துறை நகராட்சியால் நடத்தப்படும் 93–வது வாவுபலி பொருட்காட்சியினை முன்னிட்டு குத்தகை இனங்கள் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம்

பத்திரிகையில் விளம்பரம் செய்தமைக்கு கீழ்கண்ட பத்திரிகையின் செலவு பட்டியல் வரப்பெற்றுள்ளது. தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்காக.

1) தினமலர் 10–05–2018 – 26712/–
2) நமது அம்மா 10–05–2018 – 40320/–
3) தினமலர் 13–05–2018 – 20034/–

அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்றத் தீர்மான எண். 3118</u>**

**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 18</u>

குழித்துறை நகராட்சியால் ஆடி அமாவாசையை முன்னிட்டு நடத்தப்படும் 93–வது வாவுபலி பொருட்காட்சியினை வி.எல்.சி. திருமண மண்டபத்தில் 27–07–2018 முதல் 15–08–2018 வரை 20 தினங்கள் இரவு மற்றும் பகல் நேரங்களில் கலைநிகழ்ச்சிகள் நடத்த பதிவு செய்யும் விண்ணபங்களுக்கு 92–வது வாவுபலி பொருட்காட்சியில் பகல் நேரங்களில் ரூ.10,000/–க்கும், இரவு நேரங்களுக்கு ரூ.15,000/–ம் மற்றும் வாவுபலி தினம் மற்றும் முந்தைய தினங்களுக்கு பகல்நேரத்திற்கு ரூ.15,000/–மும் இரவு நேரத்திற்கு ரூ.20,000/–ம் வசூலிக்கப்பட்டுள்ளது. அதுபோல் இந்த வருடமும் தொகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் முடிவிற்கும்.

**<u>நகர்மன்றத் தீர்மான எண். 3119</u>**

**கடந்த வருடம் போல் வசூலித்திட அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 19</u>

குழித்துறை நகராட்சியால் ஆடி அமாவாசையை முன்னிட்டு நடத்தப்படும் 93–வது வாவுபலி பொருட்காட்சியில் பொருட்காட்சி மைதானத்தில் கபடி போட்டி நடத்தவும், கபடி போட்டியில் கலந்து கொள்ளும் மாணவ மாணவியர்களுக்கு சிற்றுண்டி வழங்குதல், வெற்றிபெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசு பொருட்கள் வழங்குதல் நடுவர்களுக்கு ஊதியம் வழங்குதல் மற்றும் பொருட்காட்சிக்கு தேவையான தளவாட சாமான்கள் வாங்குவதற்கும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>நகர்மன்றத் தீர்மான எண். 3120</u>**

**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 20</u>

குழித்துறை நகராட்சியால் நடத்தப்படும் 93–வது வாவுபலி பொருட்காட்சியினை முன்னிட்டு நுழைவு கட்டணம் வசூல் செய்வதில் 92–வது வாவுபலி பொருட்காட்சியில் சிறுவர்களுக்கு ரூ.5/–

மும், பெரியவர்களுக்கு ரூ.10/–ம் என வசூல் செய்யப்பட்டுள்ளது. தற்போது 93–வது வாவுபலி பொருட்காட்சியில் நுழைவு கட்டணம் நிர்ணயம் செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**<u>நகர்மன்றத் தீர்மான எண். 3121</u>**

**கடந்த வருடம் போல் வசூலித்திட அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண் .21</u>

93–வது வாவுபலி பொருட்காட்சியில் முன்வாசல் அலங்காரம் மற்றும் பந்தல் அலங்காரம் கல்லறைக்கல்ஸ் நிறுவனம் 92–வது வாவுபலியில் செய்து தந்தது போல் கல்லறைக்கல்ஸ் நிறுவன செலவில் அமைத்து தரலாம் எனவும், 92–வது வாவுபலி பொருட்காட்சியில் செலுத்தப்பட்ட தொகையினை செலுத்தலாம் என தெரிவித்து 09–05–2018–ல் விண்ணப்பம் கொடுத்துள்ளார். மேற்படி விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

அ.கு. :– மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

**<u>நகர்மன்றத் தீர்மான எண். 3122</u>**

**கடந்த வருடம் 60000 செலுத்தியுள்ளார். இந்த வருடம் ரூ.65000/– மற்றும் அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளுடன் சேர்த்து செலுத்திட மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

ஒப்பம்/–
எம். கணபதி சங்கர்,
ஆணையர்(பொ.) மற்றும்
தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்( பொ),
குழித்துறை நகராட்சி.